# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் இணைந்து செயற்படுவோம்! தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கும் அறிக்கை மூலமாக அழைப்பு

## கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்தார்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவாகிய பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஐக்கியத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பதை வரவேற்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியராகிய நாம், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் எம்முடன் இணைந்து பயணிக்க முன்வரவேண்டும் என்றும் வேண்டுகிறோம், என அக்கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் அதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிவஞானம் சிறிதரனுக்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தந்தை செல்வா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, இராஜவரோதயம், ராசமாணிக்கம், வன்னியசிங்கம், நாகநாதன், அமிர்தலிங்கம் போன்றோரால் தலைமை தாங்கப்பட்டு, தமிழ் மக்களுக்காக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த பாரம்பரியமிக்க ஒரு கட்சியின் தலைவராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றீர்கள். 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 12 வெள்ளிக்கிழமை 26.01.2024 கதிர் 166




## இலங்கையின் சுதந்திரதினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்த வேண்டும்! யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் சந்திப்பில் தீர்மானம்




இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்த வேண்டும்!, என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. சிங்கள மக்களுக்கும் கரிநாள் என்பது பொருத்தமானதே எனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் உரையாற்றியபோதே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

இலங்கைத் தீவிலே தமிழ் மக்கள் தங்கள் இருப்புக்களைத் தக்க வைப்பதற்கு அன்றிலிருந்து இன்று வரை தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள் .

அதனடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தினை கரி நாளாக பிரகடனப்படுத்தி, வடக்கு கிழக்கு தழுவிய பிரகடனத்தை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம்.

குறிப்பாக, இந்த இலங்கைத் தீவிலே தமிழ் மக்களுக்கான உரிமைகள் இருப்புக்கள் மீறப்பட்டுக் கொண்டே வருகின்றன. ஆட்சிகள் மாறுகின்றன – ஆட்சியாளர்களும் மாறிக்கொண்டே இருக்கின்றார்கள். ஆனால், தமிழ் மக்களுக்கு இன்றுவரை எந்த ஒரு தீர்வு திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.

வெறும் பேச்சுமட்டத்திலே மாத்திரமே நல்லிணக்கத்தை பேசி வருகின்றார்கள். இதய சுத்தியுடன் தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுத் தர சிங்களத் தரப்புக்கள் தயாராக இல்லை. 2 ➤

## கொழும்பில் நடந்த இந்தியாவின் 75 ஆவது குடியரசுத் தின நிகழ்வு



இந்தியாவின் 75 ஆவது குடியரசுத் தினம் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் கொழும்பில் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இந்திய உயர் ஸ்தானிகரின் வாசஸ்தலமான இந்தியன் இல்லத்தில் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இந்தியத் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையையும் பார்வையிட்டார்.

இந்தியக் குடியரசுத் தலைவரின் குடியரசு தின உரையின் குறிப்புகளும் உயர்ஸ்தானிகரால் இந்தச் சந்தர்ப்பத்தில் வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து, இலங்கை கடற்படையினரின் இசை குழுவினரால் பாடல்கள் இசைக்கப்பட்டதுடன் உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் 2 ➤

## வாக்குறுதி அரசியல்தான் எமது பொருளாதாரத்தை அழித்தது!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளரை நாட்டுக்கு அழைக்கதான் தயாராக இருப்பதாகவும், மாற்றும் யோசனைகள் இருக்கும் பட்சத்தில் அது தொடர்பில் கலந்துரையாட முன்வருமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

கொழும்பு சுங்கத் தலைமையகத்தில் இன்று (26) நடைபெற்ற சுங்கத் தின நிகழ்வில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி, வாக்குறுதி அரசியலே நாட்டின் பொருளாதாரத்தை அழிவுக்கு இட்டுச் சென்றது எனவே, தேர்தல் ஒன்றுக்கு தயாராகும் அனைத்து அரசியல் கட்சிகளும் நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டத்தைத் கொண்டிருக்க வேண்டியது அவசியம் என குறிப்பிட்டார்.

## அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து வெளிநாட்டவர் ஒருவர் உயிரிழப்பு

அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடவத்த மற்றும் கெரவலப்பிட்டிக்கு இடையிலான அதிவேக நெடுஞ்சாலையில் லொறியின் பின்பகுதியில் வான் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் வெளிநாட்டவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்கள் ராகம வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது

மின்சாரக் கட்டணம் செலுத்தாததால் ரயில் நிலையத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2 நாட்களாக மின்சாரம் இல்லாமல், குப்பி விளக்குகள் மற்றும் இதர விளக்குகளின் உதவிகள் மூலம் ரயில் நிலையத்தின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதனால், ரயில் நிலைய அதிபர்கள், ஊழியர்கள், ரயிலைப் பயன்படுத்தும் பயணிகளும் மிகுந்த சிரமத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின்வெட்டு காரணமாக பம்பலப்பிட்டி புகையிரத நிலையத்தில் அறிவிப்புகள் வெளியிடப்பட இயலாத நிலை காணப்படுவதாகவும் அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் போராட்டம்!




ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்து யாழில், இன்றைய தினம் வெள்ளிக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், யாழ். பொது நூலகத்தில் இருந்து பேரணியாக யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் உள்ளிட்ட தென்னிலங்கை ஊடக அமைப்புக்களின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் , அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர். (01)

## கொழும்பில் நடந்த இந்தியாவின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்கமைத்திருந்த கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்தியாவின் செழிப்புமிக்க பன்முகத்தன்மையானது பல்வேறு நாட்டுப்புற நடன வடிவங்களை அரங்கேற்றியிருந்த கலாசார நிகழ்வின் மூலமாக வெளிக்காண்பிக்கப்பட்டிருந்தது. இதில் குஜராத்தின் கர்பா நடனமும் உள்ளடங்குகின்றது.

யுனெஸ்கோ மனிதகுலத்தின் அருவமான கலாசார மரபுரிமை பட்டியலில் குஜராத்தின் கர்பா நடனம் மிகவும் அண்மையில் உள்வாங்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான இந்தியச் சமூகத்தினர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, உயிர் தியாகம்செய்த இந்திய அமைதி காக்கும் படையினருக்கு இந்திய அமைதி காக்கும் படையினரின் நினைவுத்தூபியில் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அஞ்சலி செலுத்தியிருந்தார்.

இன்று மாலை விசேட வரவேற்பு உபசாரம் ஒன்றும் இந்தியன் இல்லத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கையிலுள்ள பல்வேறு துறைகளையும் சேர்ந்த பிரமுகர்களும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## இலங்கையின் சுதந்திரதினத்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூகங்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள், அனைத்து தொழிற்சங்கங்களும் சுதந்திர தினத்தினை கரிநாளாக பிரகடனப்படுத்த ஆதரவினை வழங்கவேண்டும்.

தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தினை சிதைக்கும் நோக்கில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றபட்டுள்ளது. இந்த நாட்டிலே ஊடக சுதந்திரத்தை, ஒரு பொதுமகனின் கருத்துச் சுதந்திரத்தைக் கூட இந்த அரசாங்கம் பறித்தெடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. இதன்மூலம் போராட்டங்களில் ஈடுபடுகின்றவர்களை ஒடுக்க இவ்வாறான சட்டங்களை நடைமுறைப்படுத்தி, மல்லினப்படுத்தி, அவர்களைக் கைது செய்கின்ற நோக்கோடு இந்த அரசு செயற்பட்டு வருகின்றது.

இவர்கள் ஒருபொழுதும் தமிழர்களுடைய அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை , காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், வடக்கு கிழக்கில் அத்துமீறி நிகழ்கின்ற குடியேற்றத் திட்டங்கள், திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் போன்றவற்றை நிறுத்தப் போவதில்லை.

எமக்கான தீர்வு கிடைக்கும் வரை நாம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு ஆகவேண்டும் என்பது வரலாற்று உண்மை.

மேலும், கரிநாள் என்பது சிங்கள மக்களுக்கும் பொருத்தமானதே! காரணம், இன்றைய தினம் சிங்கள மக்களுக்கும் எதிரான சட்டங்கள் உருவாக்கப்பட்ட வண்ணமே உள்ளன. இதனை அனைத்துத் தரப்புக்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

சமநேரத்தில் எங்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அதனடிப்படையில் 13 ஆவது திருத்தம் தமிழர்களுக்கான ஆரம்பப் புள்ளியோ முடிவுப் புள்ளியோ கிடையாது .13இனை நாம் ஒரு போதும் ஏற்றுகொள்ள முடியாது. ஆகவே, தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் காணாது நாங்கள் எங்களுடைய போராட்டங்களையோ போராட்ட வடிவங்களையோ கைவிடப்போவதில்லை என பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்துகின்றோம். எங்களுடைய இனம் விடுதலை பெற வேண்டும். இனத்திற்குரிய நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க இலங்கையின் சுதந்திர தினத்தினை கரிநாளாகப் பிரகடனப்படுத்த பூரண ஆதரவினைத் தந்துதவ வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (01)

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சி தனித்து நின்று, தனது கோரிக்கைகளை வெல்ல முடியவில்லை என்ற காரணத்தினால் இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவை இணைந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கிய பாரம்பரியமும் தந்தை செல்வா தலைமையில் நடைபெற்றது.

இவ்வாறு தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 1976ஆம் ஆண்டிலிருந்து தனது கட்சியான தமிழரசுக் கட்சியை முன்னிலைப்படுத்தாமல், தமிழர் விடுதலைக் கூட்டணி என்பதே தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் ஓர் ஐக்கிய முன்னணி என்பதை தந்தை செல்வா அடையாளம் காட்டினார்.

அதன் பின்னர், 1985ஆம் ஆண்டில் பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழப்புரட்சி அமைப்பு ஆகியன இணைந்து திம்புக் கோட்பாடு எனப்படும் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தனர். அதுவே தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் தீர்விற்கான அடைப்படையாகக் கொள்ளப்படுகின்றது.

2002ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் செயற்பட்டு வந்தன.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக விடுதலைப் புலிகள் ஆயுதப்போராளிகளாக செயற்பட்ட வேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக வழிமுறையில் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தினை முன்னெடுத்திருந்தது. இரு தரப்பும் ஒருவருக்கொருவர் அனுசரணையுடன் செயற்பட்டு வந்தார்கள்.

சம்பந்தனால் தலைமையேற்று நடாத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் நிலவிய பல்வேறு முரண்பாடுகள் காரணமாக அதில் இணைந்திருந்த பல கட்சிகளும் தனிநபர்களும் வெளியேறியது மாத்திரமல்லாமல், இறுதியில் 2023ஆம் ஆண்டு நடைபெற இருந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தாங்கள் தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற காரணத்திற்காக, அவர்களும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார்கள். அதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயலிழந்துள்ளது.

இந்த நிலையில் ஈபிஆர்எல்எவ், ரெலோ, புளொட், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் ஆகியோர் இணைந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்துள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான ஒரு யாப்போ அமைப்பு வடிவமோ இல்லாத காரணத்தால் கூட்டமைப்பிற்குள் பல்வேறு முரண்பாடுகள் அவ்வப்போது தோற்றம் பெற்றன.

இவற்றை நிவர்த்தி செய்யும்பொருட்டு, நாம் உருவாக்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்காக ஒரு யாப்பு வரையப்பட்டிருக்கின்றது. அது தேர்தல் ஆணையத்தில் பதிவுசெய்யப்பட்டும் இருக்கின்றது. இந்தக் கூட்டணிக்கென்று குத்துவிளக்குச் சின்னமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி, யாப்பின் அடிப்படையில் நிறைவேற்றுக் குழுவும் கட்சிக்கான கட்டமைப்பையும் உருவாக்கப்பட்டுள்ளன.

காலத்தின் தேவை கருதி, 2002ஆம் ஆண்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டபோதும் அதனைப் பதிவு செய்ய வேண்டும் என்று அதில் அங்கம் வகித்த பல்வேறு கட்சிகள் தொடர்ந்தும் கோரிக்கைகளை வைத்தபோதும் தமிழரசுக் கட்சி அதற்கு செவிசாய்க்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 22 வருட காலமாக தமிழ் மக்களுக்காகப் போராடும் ஓர் அரசியல் கட்சியாக தன்னை நிறுவனப்படுத்திக்கொள்ளாமல், தேர்தல் காலங்களில் கூட்டாகவும் பின்னர் தமிழரசுக் கட்சியாக முடிவெடுத்துச் செயற்படுவதுமே இன்றுவரை தொடர்கின்றது. இதன் காரணமாகவே இடைப்பட்ட காலங்களில் பல கட்சிகளும் அதிலிருந்து வெளியேறின.

இந்த நிலையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிவஞானம் சிறிதரன் அவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியோரை ஒன்றிணைத்து 2009ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை ஊடகங்களினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடும் ஒரு வலுவான அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் தீர்க்கமான சிந்தனையுடன் பயணிக்கின்றது.

இதன் அடிப்படையில்தான் ஒரு வருடத்திற்கு முன்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி உருவாக்கப்பட்டு, அது இன்றுவரை தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புதிய புதிய அமைப்புகள் தொடர்பாக சிந்திப்பதை விடுத்து, ஏற்கனவே செயற்பட்டுக்கொண்டிருக்கும் கூட்டணியில் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஏனைய கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்று விரும்புகிறோம் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (04)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# இந்தியாவின் 75 ஆவது குடியரசுத் தின நிகழ்வுகள் யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதுவராலயத்தில்





யாழ்ப்பாணம், ஜன.26

இந்தியாவின் 75 ஆவது குடியரசு தின நிகழ்வுகள் யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதுவராலயத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்திய எல்லைப்படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் யாழ் இந்தியத் துணைத்தூதுவர் அழைத்துவரப்பட்டு, இந்திய தேசிய கொடி ஏற்றலுடன் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இந்திய குடியரசுத் தலைவரின் சிறப்புரையினை யாழ்ப்பாண இந்தியத் தூதுவராலய துணைத் தலைவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தளித்தோடு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

குடியரசு தின நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவராலய அதிகாரிகள், இந்தியப் பிரஜைகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (O1)

## நெடுந்தீவில் உழுந்து அறுவடை நிகழ்வு



நெடுந்தீவு - ஊரும் உறவும் நிறுவனத்தின் விவசாய வேலைத்திட்டத்தின் கீழ், "நல்வாழ்வு நம்கையில்" தொடர் வேலைத் திட்டத்தின் ஊடாக, உழுந்து அறுவடை நிகழ்வு இன்றையதினம் காலை நெடுந்தீவு கிழக்கு சண்ணாங்குளம் பகுதியில் இடம்பெற்றது.

அறுவடை நிகழ்வினை விவசாயி த.பிரபாரத்தினம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்க, ஊரும் உறவும் நிறுவனத்தின் விவசாய வேலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள குழு உறுப்பினர்கள் உழுந்து அறுவடையினை மேற்கொண்டிருந்தனர்.

## கல்முனையில் கற்றல் உபகரணங்கள் நாபிர் பவுண்டேஷன் வழங்கியது




(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை பிரதேசத்திற்கு உட்பட்ட வசதி குறைந்த குடும்பங்களில் உள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பொறியியலாளர் உதுமான்கண்டு நாபீர் அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் உதுமான் கண்டு நாபீர் அவர்களின் மாவட்ட இணைப்பாளர் பாசக் கவி பாயிஸ் கரீம் கலந்து சிறப்பித்ததோடு கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் நாபீர் பவுண்டேஷன் உயர் பீட உறுப்பினர்களான ஜே.ஜாபீர் எஸ்.நௌபர், அஹமட் சபீர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## கல்வியியல் கல்லூரியில் தைப்பொங்கல் நிகழ்வு






அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் தைப்பொங்கல் நிகழ்வு கல்லூரி பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணிமூர்த்தி தலைமையில் நேற்று இடம்பெற்றது. (படங்கள் - வி.ரி. சகாதேவராஜா)



# இந்தியாவின் 75வது குடியரசுத் தின விழா பிரான்ஸ் அதிபர் மக்ரோனும் பங்கேற்பு!



இந்தியாவின் 75வது குடியரசு தின விழா இந்தியா முழுவதும் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டு வருகி றது. இதனையொட்டி தலைநகர் டெல்லியில் இந்தியக் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். 21 பீரங்கி குண்டுகள் முழங்க குடியரசுத் தலைவரால் தேசியக் கொடியேற்றி மரியாதை செலுத்தப்பட்டது. தேசிய கீதம் இசைக்கப்பட்டது. பின்னர் கர்தவ்ய பாதையில் முப்படைகள் உள்ளிட்ட பல்வேறு படைப் பிரிவினரின் அணிவகுப்பை தொடங்கி வைத்த குடியரசுத் தலைவர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

முன்னதாக, டெல்லியில் போர் வீரர்கள் நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தினார். அவருடன் இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படை தளபதிகளும் அஞ்சலி செலுத்தினர்.

டெல்லியில் நடைபெற்ற சிறப்பு அணிவகுப்பில் தலைமை விருந்தினராக பங்கேற்க பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவரை இன்று குடியரசு தின விழாவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தன்னுடன் குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் அழைத்து வந்தார். சாரட் வண்டியின் முன்னும் பின்னும் குதிரையில் வீரர்கள் அணிவகுத்து வந்தனர்.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவையும், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோனையும் பிரதமர் மோடி, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைத் தளபதிகள் ஆகியோர் வரவேற்றனர். பின்னர் குடியரசுத் தலைவர் 21 குண்டுகள் முழங்க, தேசிய கீதம் இசைக்கப்பட இந்தியத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

அதன் பின்னர் கண்கவர் அணிவகுப்பு நடைபெற்றது. குதிரைப் படை, பீரங்கிப் படை அணிவகுப்பு மரியாதையை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்றார். அதன் பின்னர் மற்ற அணிவகுப்புகள் தொடங்கின. அந்த வரிசையில் பிரான்ஸ் நாட்டு ராணுவ வீரர்களின் அணிவகுப்பு அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது. (04)

# இளையராஜா மனதை இழக்காதிருக்க வேண்டும்! பவதாரிணி மறைவுக்கு கமல்ஹாசன் இரங்கல்



பிரபல பின்னணிப் பாடகியும் இசையமைப்பாளருமான பவதாரிணி மறைவுக்கு நடிகரும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இசையமைப்பாளர் இளையராஜாவின் மகளும், பிரபல பின்னணி பாடகியுமான பவதாரிணி உடல்நலக் குறைவால் நேற்று காலமானார். அவருக்கு வயது 47. கடந்த சில மாதங்களாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர், அதற்காக சிகிச்சை மேற்கொண்டு வந்தார். இதற்கான ஆயுர்வேத சிகிச்சைக்காக அவர் இலங்கையில் தங்கிருந்தார். ஆயினும், சிகிச்சை பலனின்றி நேற்று காலமானார். அவரது உடல் இன்று மாலை சென்னைக்குக் கொண்டுவரப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

பவதாரிணி மறைவுக்கு நடிகரும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தள பதிவில் அவர், "மனம் பதைக்கிறது. அருமைச் சகோதரர் இளையராஜாவைத் தேற்ற என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர் கைகளை மானசீகமாகப் பற்றிக்கொள்கிறேன். பவதாரிணியின் மறைவு பொறுத்துக்கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாத ஒன்று. இந்தப் பெருந்துயரில் என் சகோதரர் இளையராஜா மனதை இழக்காதிருக்க வேண்டும். பவதாரிணியின் குடும்பத்தாருக்கு என் நெஞ்சார்ந்த இரங்கல்", என்று கமல் கூறியுள்ளார்.

மறைந்த பவதாரிணி, கடந்த 2000 ஆம் ஆண்டில் வெளியான 'பாரதி' படத்தில் பாடிய 'மயில் போல பொண்ணு ஒண்ணு' என்ற பாடலுக்காக தேசிய விருதை பெற்றார். தொடர்ந்து, தேடினேன் வந்தது, காதலுக்கு மரியாதை, அழகி, பிரண்ட்ஸ் என்று ஏராளமான திரைப் படங்களில் பாடல்கள் பாடியுள்ளார்.

மை பிரண்ட் , பிர் மிலேங்கே ஆகிய இந்திப் படங்களுக்கும் தமிழில் இலக்கணம், அமிர்தம் உட்பட சில படங்களுக்குமாக 10 படங்களுக்கு அவர் இசையமைத்துள்ளார். (04)

# சவுதி அரேபியா நாட்டில் முதல் மதுபானக் கடை



சவுதி அரேபியா தனது நாட்டில் முதல் மதுபானக் கடையைத் திறக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்நாட்டின் தலைநகர் ரியாத்தில் தனது முதல் மதுபானக் கடையைத் திறக்கத் தயாராகி வருகிறது சவுதிஅரேபியா. இது முஸ்லிம் அல்லாத வெளிநாட்டு தூதரக அதிகாரிக்கு மட்டுமான கடை என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து வெளியான அறிக்கையில், இங்கு மதுபானம் வாங்கும் வாடிக்கையாளர்கள் முதலில் கைபேசி செயலி மூலம் பதிவு செய்து, வெளியுறவு அமைச்சகத்திடம் இருந்து அனுமதிக் குறியீட்டைப் பெற வேண்டும். மேலும் தங்களுக்கான மாதாந்திர ஒதுக்கீட்டு அளவினை மதிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இஸ்லாத்தில் மது அருந்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. தீவிர பழமைவாத முஸ்லிம் நாடான சவுதி அரேபியாவை சுற்றுலா மற்றும் வணிகத்திற்காக திறந்துவிடும் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் தலைமையிலான அரசின் முயற்சிகளின் ஒருபகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இந்தப் புதிய கடையானது ரியாத்தின் தூதரக குடியிருப்பில் அமைந்துள்ளது. முஸ்லிம் அல்லாத வெளிநாட்டுக் குடிமக்கள் இந்தக் கடையை அணுக முடியுமா? என்பது குறித்து தெளிவாக கூறப்படவில்லை. சௌதி அரேபியாவில் பல லட்சக்கணக்கான வெளிநாட்டவர்கள் வசித்து வருகிறார்கள்.

இந்தப் புதிய கடை இன்னும் ஒரு சில வாரங்களில் திறக்கப்பட உள்ளது. சவுதி அரேபியாவில் மது அருந்துவதற்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமலில் உள்ளன. இந்தக் குற்றத்திற்கு நாடு கடத்துதல், அபராதம் அல்லது சிறைத் தண்டனை போன்றன வழங்கப்படுகின்றன. தற்போதைய நிலையில் கள்ளச் சந்தையில் மட்டுமே மதுபானம் கிடைக்கிறது.

பல ஆண்டுகளாக கடுமையான விதிமுறைகளைப் பின்பற்றி வந்த சவுதி அரேபியாவில் இளவரசர் முகமது பல்வேறு மாற்றங்களை செய்து வருகிறார்.

அந்த வகையில் அவர் எடுத்த நடவடிக்கைகளான மதச்சார்பற்ற சுற்றுலாவுக்கு அனுமதி, இசை நிகழ்ச்சிகள் மற்றும் பெண்களை வாகனம் ஓட்ட அனுமதித்தல், ஆகியவற்றுடன் தற்போது இந்த நடவடிக்கையும் சேர்ந்துள்ளது. (04)



# கவிஞர் தீபச்செல்வனின் பதுங்கு குழியில் பிறந்த குழந்தை சிங்கள மொழியாக்க நூல் பற்றிய கலந்துரையாடல்




கவிஞர் தீபச்செல்வனின் முதல் கவிதைத் தொகுப்பான பதுங்கு குழியில் பிறந்த குழந்தை நூலின் சிங்கள மொழியாக்கம் அண்மையில் வெளியாகி பெருவரவேற்பை பெற்று வருகிறது.

இந்த நிலையில் கம்பஹாவின் மிசர பகுதியில் அக்கவிநூல் குறித்து ஒரு கலந்துரையாடலை சிங்கள இலக்கிய அமைப்பான The Asian Review Sinhala ஏற்பாடு செய்திருக்கிறது. இதில் தீபச்செல்வனும், நூலைச் சிங்களத்தில் மொழிபெயர்த்த அனுசா சிவலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் அப்பகுதியை சேர்ந்த தமிழ், சிங்கள படைப்பாளிகள் மற்றும் வாசக உறவுகளை இணைந்துகொள்ளுமாறு அவர்கள் அன்புடன் அழைத்துள்ளனர்.

## மரண தண்டனை கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கடந்த 24 திகதி வரையிலான கணக்கின்படி சிறைச்சாலையில் 1194 மரண தண்டனை கைதிகள் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 445 பேர் மரண தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளனர். மிகுதி 749 மரண தண்டனை கைதிகளில் 15 பெண்களும் அடங்குகின்றனர், என சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேன்முறையீடு செய்த 445 கைதிகளில் 11 பெண்கள் உள்ளனர். கடந்த 24ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் புதிதாக 7 கைதிகளுக்கு மரண தண்டனை விதித்திருந்தது. இதன்படி மரண தண்டனைக் கைதிகளின் எண்ணிக்கை 1201 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெத-57)

## உகந்தமலை முருகன் ஆலயத்தில் நடைபெற்ற தைப்பூசத் திருவிழாவும் பாற்குட பவனியும்



வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய தைப்பூசத் திருவிழாவும் பாற்குட பவனியும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள்தலைமையில் இடம் பெற்றன.

(படம்- வி.ரி. சகாதேவராஜா)

## ஓவியப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பாராட்டு நிகழ்வு




(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலை மாணவர்களுக்கிடையே முயற்சியாண்மைக் கருத்துக்களை ஊக்குவிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் அண்மையில் மாணவர்களிடையே போட்டிகள் இடம்பெற்றிருந்தன.

இதன் போது, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் பங்குபற்றிய காத்தான்குடி மெத்தைப்பள்ளி வித்தியாலய மாணவி, மாவட்ட ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் பங்கு பற்றிய ஏனைய இரண்டு மாணவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு மட்டக்களப்பு வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

## தீவிரமாகும் பிரான்ஸ் விவசாயிகளின் போராட்டம்! பாரிஸ் பிராந்தியத்தில் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்

பிரான்சில் தீவிரமடைந்துள்ள விவசாயிகளது போராட்டம், பாரிஸ் பிராந்தியத்தை நெருங்கி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று வெள்ளிக்கிழமை பாரிஸின் முக்கிய வீதிகளில் தடைகளை ஏற்படுத்தி மறியலில் ஈடுபடு மாறு இல்-து-பிரான்ஸ் இளம் விவசாயிகள் கழகம் அழைப்பு விடுத்திருக்கிறது. தங்களது கோரிக்கைகளுக்குத் திட்டவட்டமான பதில் கிட்டாதுவிடின் பாரிஸ் வீதிகளை முடக்குகின்ற இறுதிக் கட்டப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்று விவசாய அமைப்புகள் ஏற்கனவே எச்சரித்திருக்கின்றன.

பிராந்தியங்களைச் சேர்ந்த உழவர் சங்கங்களும் பண்ணையாளர்கள் அமைப்புகளும் பாரிஸ் பிராந்தியத்தை நோக்கிப் படையெடுக்க ஆயத்தமாகி வருகின்றன என்று பிரான்ஸின் புலனாய்வுச் சேவைகள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், பாரிஸ் பிராந்தியத்தின் உள்செல்லும் வெளி அகலும் வீதிகளில் தடைகளை ஏற்படுத்துகின்ற முஸ்தீபுகள் நேற்று முதல்



தொடங்கியுள்ளன.

பாரிஸ் பிராந்தியத்துக்கு நெருக்கமான A1,A6,A10-11, A13, A15 ஆகிய ஓட்டோ றூட்டுகளில் இன்று வெள்ளிக்கிழமை விடிகாலை முதல் “தடை நிலைகள் நிறுவப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், வீதிப் போக்குவரத்துகளில் தடைகள், தாமதங்கள் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (தாஸ் நியூஸ் தளம்)

## இணுவில் கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத் திருநாள் பெருமஞ்சம்





யாழ்ப்பாணம் இணுவில் கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத் திருநாளை முன்னிட்டு உலகப் பெருமஞ்சத்தில் வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமான் எழுந்தருளினார்.

மஞ்சத் திருவிழாவின்போது பாரம்பரியக் கலைகளான மயிலாட்டம், கரகாட்டம், சிலம்பம், தீப்பந்த விளையாட்டுக்கள் என்பனவும் இடம்பெற்றன.



# தடை செய்யப்பட்ட போதைப்பொருளை பயன்படுத்தினர் சிம்பாப்வே அணி வீரர்களுக்கு நான்கு மாத காலத் தடை





தடை செய்யப்பட்ட போதைப்பொருளை பயன்படுத்திய குற்றச்சாட்டில் சிம்பாப்வே அணியின் சகலதுறை வீரர்களான வெஸ்லி மதவெரே மற்றும் பிராண்டன் மவுடா ஆகிய இருவருக்கும் நான்கு மாத கால தடை விதிக்க அந்நாட்டு கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

கடந்தாண்டு வெஸ்லி மதவெரே மற்றும் பிராண்டன் மவுடா ஆகிய இருவரும் தடை செய்யப்பட்ட போதைப் பொருள் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் முடிவில் அவர்கள் போதைப்பொருள் பயன்படுத்தியது உறுதிசெய்யப்பட்டதை அடுத்து அவர்கள் இருவரும் சிம்பாப்வே கிரிக்கெட்டிலிருந்து இடைநீக்கம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், குறித்த 2 வீரர்களுக்கான தண்டனையை சிம்பாப்வே கிரிக்கெட் சபை நேற்று அறிவித்துள்ளது.

அதன்படி வெஸ்லி மதவெரே மற்றும் பிராண்டன் மவுடா ஆகிய இருவருக்கும் நான்கு மாதங்கள் கிரிக்கெட் விளையாட தடைவிதிக்கப்படுவதாகவும், 2024 ஜனவரி மாதம் முதல் மூன்று மாதங்கள் சம்பளத்திலிருந்து 50 சதவீத தொகை அபராதமாக விதிக்கப்படுவதாகவும், மேலும் அவர்களுக்கு இறுதியான எச்சரிக்கை விடுக்கப்படுவதாகவும் அறிவித்துள்ளது.

அத்துடன், இருவரும் சிம்பாப்வே கிரிக்கெட்டின் மருத்துவர்கள் அடங்கிய மறுவாழ்வு மையத்திற்கு செல்லவேண்டும் என்று சிம்பாப்வே கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சிம்பாப்வே கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் உட்கொள்வதை சிம்பாப்வே கிரிக்கெட் சபை ஒருபோதும் அனுமதிக்காது. போதைப்பொருள் உட்கொள்வது ஒரு கடுமையான குற்றமாகும். ஆனால், இரு வீரர்களின் அத்துமீறலால் இது ஒட்டுமொத்த சிம்பாப்பே கிரிக்கெட் சபைக்கும், கிரிக்கெட் விளையாட்டிற்கும் அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது என்றும் ஒழுக்காற்றல் குழு கருதியது.

இருப்பினும், வீரர்களின் கருத்துகளையும் நாங்கள் கேட்டறிந்துள்ளோம். அவர்கள் செய்த தவறுக்காக கவலை தெரிவித்ததுடன், ஏற்கெனவே அப்பழக்கத்திலிருந்து விடுபடுவதற்காக மறுவாழ்வு மையத்தை அனுகி சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர்', என்று தெரிவித்துள்ளது.

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரராக ஜொலித்தவர் 23 வயதான வெஸ்லி மதவெரே. இவர் கடந்த 2020ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகியதுடன், இதுவரை 2 டெஸ்ட், 36 ஒருநாள் மற்றும் 60 சர்வதேச ரி-20 போட்டிகளில் விளையாடி 26 விக்கெட்டுகளையும், 1700க்கும் மேற்பட்ட ஓட்டங்களையும் எடுத்துள்ளார்.

அதேபோல, 26 வயதான பிராண்டன் மவுடா சிம்பாப்வே அணிக்காக 4 டெஸ்ட், 12 ஒருநாள் மற்றும் 10 சர்வதேச ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இதேவேளை, குறித்த 2 வீரர்களைத் தவிர, போதைப் பொருள் பயன்படுத்திய குற்றச்சாட்டில் மற்றுமொரு சிம்பாப்வே அணி வீரரான கெவின் கசுசாவிற்கும் தற்காலிக போட்டித் தடை விதிக்க அந்நாட்டு கிரிக்கெட் சபை கடந்த வாரம் நடவடிக்கை எடுத்திருந்தது. குறித்த வீரர் சிம்பாப்வே அணிக்காக 7 போட்டிகளில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.






## விலை உயர்வால் மது விற்பனையில் சரிவு

மதுபானத்தின் விலை அதிகரிப்பால், மது விற்பனை கணிசமாக குறைந்துள்ளதுடன், இதனால் அரசாங்கத்திற்கு கடந்த 2023 ஆம் ஆண்டு வருடத்தில் 40 பில்லியன் ரூபா கலால் வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் நடத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த இழப்புத் தொகை சட்டவிரோத மதுபானம் அல்லது வேறு போதைப் பொருட்களுக்காக செலவிடப்பட்டிருக்கலாம் என கலால் ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி தெரிவித்துள்ளார்.

மேலும், 2022 ஆம் ஆண்டில் 26.5 மில்லியன் லீற்றர் தூய நடுத்தர மதுசாரம் உற்பத்தி செய்யப்பட்டதாகவும், 2023 ஆம் ஆண்டில் 20 மில்லியன் லீற்றரராக குறைத்து உற்பத்தி செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மதுபானங்களின் விலை உயர்வால் மது உற்பத்தி குறைந்துள்ளதாகவும் மதுபானங்களின் விலையை குறைப்பதற்கான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறும் மதுபானக்கடை உரிமையாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெத-58)

## மாத்தளையில் மந்தைகளின் அதிகரிப்பை கட்டுப்படுத்த கருத்தடை முறை அறிமுகம்

மந்தைகளினால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் வகையில், மாத்தளை மாவட்டத்தில் மந்தைகளுக்கான கருத்தடை முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மந்தைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கில் மும்மொழியப்பட்ட கருத்தடை திட்டதிற்கமையவே இச்செயல்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான நாலக பண்டாரவின் யோசனைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக மாத்தளை மாவட்ட விவசாய பணிப்பாளர் அஜிதா தெரிவித்துள்ளார்.

உத்தேச கருத்தடை முன்னோடி திட்டத்திற்கு ரூ.4.1 மில்லியன் நிதி வழங்கப்பட்டுள்ளது. மாத்தளை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தொடம்தெனிய மற்றும் கரஸ்கமவைச் சுற்றியுள்ள ஐந்து மந்தைகள் கூட்டத்தைச் சேர்ந்த சுமார் 150 மந்தைகளுக்கு முதற்கட்டமாக கருத்தடை செய்யப்படவுள்ளதாக மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் நாலக்க பண்டார தெரிவித்துள்ளார். இப்பகுதிகளில் மந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பினால் அது பயிர் விளைச்சலில் சுமார் 4 வீத அழிவை ஏற்படுத்தியுள்ளதுடன் சொத்து சேதமும் பெருமளவில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரெத-57)

## நாவலடியில் இளைஞர் தூக்கிட்டுத் தற்கொலை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு , நாவலடி பிரதேசத்தில் 21 வயதுடைய இளைஞரொருவர் இன்று வெள்ளிக்கிழமை காலை மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு, குமாரபுரத்தைச் சேர்ந்த மேற்படி இளைஞர் நாவலடியில் திருமணம் முடித்தவராவார். இத் தற்கொலை சம்பந்தமாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.01.2024 இல் வெளியிடப்பெற்றது.